ஐக்கிய குரல்
தேசத்தின் எழுச்சிமிகு சக்தி!
பெப்ரவரி – 2022
aikkiyakural@gmail.com

# பஞ்சம் தலைவிரித்தாடுமா?



நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கை வாழ் பலவீனமான மக்கள் தமது உணவுப்பாவனையைக் குறைத்து போஷாக்குக் குறைந்த லாபமான உணவுப்பொருட்களை உண்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாக உலக உணவு ஸ்தாபனம் கருத்து வெளியிட்டுள்ளது.

ரூபாவின் பெறுமதி குறைவு, ஆகாயத்தை நோக்கிச் சென்றுள்ள விலைவாசி அதிகரிப்பு, பணவீக்கம் என்பனவற்றுடன் பசளைப் பிரச்சினை, எரிபொருள் பற்றாக்குறை என்பன காரணமாக பலவீனமான மக்கள் இந்த அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக உலக உணவு ஸ்தாபனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசின் தவறான முகாமைத்துவம் காரணமாக மக்களின் பிரதான உணவான அரிசியின் விலை நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே செல்கின்றது. கொரோனாத்தொற்று காரணமாக தமது வருமான வழிகளை இழந்து தவிக்கும் அப்பாவி மக்கள் அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவினை தாங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்தாண்டு கடைசி காலாண்டு காலத்திலிருந்த பொருட்களின் விலைகளுடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் பொருட்களின் விலை 50 சதவீதமளவு அதிகரித்துள்ளது என உலக உணவு ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

ரூபாவின் பெறுமதி குறைப்பு அத்தியாவசிய உணவுப் பொருட்களான அரிசி, கோதுமை, சீனி, தானியங்கள், பால்மா உட்பட அநேகமானவற்றின் விலை கடந்த மாதம் அதிகரித்துள்ளன.

அரசாங்கம் சில பொருட்களுக்கு இருந்த கட்டுப்பாட்டு விலைகளை தளர்த்தியதனால் சந்தையில் வியாபாரிகள் தாம் நினைத்த விலைக்கு பொருட்களை விற்கத் தொடங்கியுள்ளனர். பொருட்களுக்கு நிலவும் பற்றாக் குறையை போக்குவதற்கு அரசு ஆக்கபூர்வமாக எந்த நடவடிக்கையும் எடுத்தாக தெரியவில்லை. அரசின் இச் செயற்பாடுகளால் நாட்டு மக்கள் பஞ்சத்தை எதிர்நோக்குவது தவிர்க்க முடியாத ஒன்றாகியுள்ளது.

வறுமைக்கோட்டில் வாழும் மக்களுக்கு உடனடியாக நிவாரணங்களை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்தியாவசியப் பொருட்களான கோதுமை மாவு, பால் மா, சீனி மற்றும் தானிய வகைகளை மக்களுக்கு குறைந்த விலையில் கிடைப்பதற்கு அரசு உறுதி செய்ய வேண்டும்.

இந்தப் பின்னணியில் மருந்து வகைகளது விலையும் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளன. அநேக முக்கிய மருந்துகளை சந்தையில் பெற முடியாத நிலை உருவாகியுள்ளது. டொலர் பற்றாக் குறை காரணமாக அவற்றை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த அரசின் காலத்தில் மருந்துகளின் விலைகள் கணிசமாகக் குறைக்கப்பட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது. இன்று எந்த விலைக்கும் மருந்துகளை வாங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அரசின் தவறான முகாமைத்துவம் காரணமாக மக்கள் அத்தியாவசிய உணவு மற்றும் மருந்துகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.




“ஐக்கிய குரல்” மாத இதழ் பற்றிய உங்கள் கருத்துகள், விமர்சனங்களை மின்னஞ்சல் ஊடாக எங்களுக்கு அனுப்பி வையுங்கள்...

எமது மின்னஞ்சல் முகவரி:
aikkiyakural@gmail.com

# களுத்துறை மாவட்டத்திற்கு தமிழ் பிரதிநிதி வேண்டும்

**வள்ளியம்மாள், அகலவத்தை**



மலையகம் என்றால் ஹட்டன், நுவரெலியா மற்றும் பதுளை ஆகிய பிரதேசங்கள் மாத்திரம் தான் என கருதுபவர்கள் களுத்துறை மாவட்டமும் பெருந்தோட்ட பகுதி என்பதை மறந்து விட்டார்கள்.

களுத்துறை மாவட்டத்தில் இருந்து தமிழ் பிரதிநிதி ஒருவர் இதுவரையான காலப்பகுதியில் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படாமலிருப்பது துரதிஷ்டவசமானதாக உள்ளதால் களுத்துறை மாவட்டத்தில் தோட்டப்புறங்களில் வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு மதிப்பளிக்கப்படுவதில்லை.அப்பிரதேசங்களில் வாழும் தமிழர்களின் பிரச்சினை பத்தோடு பதினொன்றாகவே பார்க்கப்படுகிறது.

களுத்துறை மாவட்டத்தில் இருந்து தமிழ் பிரதிநிதியொருவரை பாராளுமன்றிற்கு அனுப்ப வேண்டும் என்ற நோக்கம் அப்பிரதேசத்தில் வாழும் மக்களிடம் காணப்படுகிறதா என்பது கேள்விக்குறியாக காணப்படுகிறது. பெரும்பான்மையின அரசியல்வாதிக்கு ஆதரவாக செயற்படுபவர் குறித்த தோட்டத்தில் முக்கிய புள்ளியாக காணப்படுவார். அவர் தேர்தல் காலத்தில் அந்த சிங்கள அரசியல்வாதி உள்ள கட்சிசார்பில் தேர்தலில் போட்டியிடுவார்.

இவ்வாறு பல தமிழ் வேட்பாளர்கள் போட்டியிடுவார்கள். இறுதியில் ஒருவர் கூட 15 ஆயிரம் வாக்குகளை கூட பெறுவதில்லை. தமிழ் மக்களின் வாக்குகளை சிதறடிக்க வேண்டும் என்ற அந்த பெரும்பான்மையின அரசியல்வாதியின் நோக்கம் வெற்றிபெறும். களுத்துறை மாவட்டத்தில் இருந்து தமிழ் பிரதிநிதி ஒருவரை பாராளுமன்றிற்கு தெரிவு செய்ய வேண்டும் என்பதற்கு களுத்துறை மாவட்டத்தில் வாழும் தோட்ட மக்களிடம் முறையான திட்டம் காணப்படுகிறதா என்பது கேள்விக்குறியாகியுள்ளது. தமிழ் மக்கள் மத்தியிலான தவறான வழிகாட்டல்கள் அவர்களின் அடையாளத்தை காலம் காலமாக மறைத்து வருகிறது.